**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

STC.No.268/2024
Complainant side witness.01

| | |
|---|---|
| பெயர் : ஐந்துகாயம் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of October 2024.

07.10.2024

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனது பக்க சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். எனது பக்க ஆவணங்கள்

1) 10.04.2024 ம் தேதியிட்ட காசோலை எண்.612714 ரூபாய் 45,00,000/–த்திற்கான முதுகுளத்தூர் கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி காசோலை அசல் பு.த.சா.ஆ.1

2) 16.04.2024 ம் தேதியில் காசோலை எண்.612714 போதிய பணம் இல்லை என்று முதுகுளத்தூர் கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியால் கொடுக்கப்பட்ட குறிப்பாணை அசல் பு.த.சா.ஆ.2.

3) 03.05.2024 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.3.

4) 04.05.2024 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சல் ரசீது அசல் பு.த.சா.ஆ.4.

5) 21.05.2024 ம் தேதி எதிரி, வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்தல் அட்டை பு.த.சா.ஆ.5.

6) 27.05.2024 ம் தேதியிட்டு எதிரி, எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அஞ்சல் உறையுடன் பு.த.சா.ஆ.6.

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டு கோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.